**முக்கிய உண்மை ஆவணம்**

இம்முக்கிய உண்மை ஆவணமானது ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சியினால் வழங்கப்படுகின்ற உற்பத்திகள் மற்றும் சேவைகளது பிரதான அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. இவ் ஆவணமானது இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளுடன் இணைந்தொழுகுவதாக காணப்படுகின்றது.

கம்பெனி அதனது தற்றுணிவின்கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள், நிபந்தனைகள், அறிவீடுகள் மற்றும் கட்டணங்களை திருத்த, சேர்க்க அல்லது நீக்க உரித்துடையதாகும்.

## *அ. உற்பத்திகளும் சேவைகளும்*

பின்வரும் உற்பத்திகளும் சேவைகளும் ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சியினால் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

| உற்பத்தி/சேவைகள் | விளக்கம் | பிரதான உற்பத்தி அம்சங்கள், நியதிகளும் நிபந்தனைகளும் |
|---|---|---|
| குத்தகை | நிதிசார் பிரதானமாக குத்தகை வசதிகள் தனிப்பட்ட மற்றும் வர்த்தக பாவனைக்காக பதிவுசெய்யபட்ட மற்றும் பதிவுசெய்யப்படாத வாகனங்களது பிரசித்திபெற்ற மாதிரிகளுக்காக வழங்கப்படுகின்றது. நிதிசார் குத்தகைகள் புத்தம்புதிய இயந்திரங்களுக்கும் கருத்திற்கொள்ளப்படும். நிதிசார் குத்தகை வசதிக்கு தகுதிப்பெறுவதற்காக விண்ணப்பதாரர் குத்தகை அர்ப்பணிப்புகளை எதிர்கொள்வதற்கான அவரது இயலுமையை தெளிவாக வெளிப்படுத்த வேண்டும். | • மீள்செலுத்தும் தகுதியுடன் ஒரு சொத்தினை வாங்க விரும்பும் 18 வயதிற்கு மேற்பட்ட எந்தவொரு நபரும் அல்லது நிறுவனமும்<br>• பெறுமதிக்கான கடன் வீதமானது இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகள் மற்றும் விண்ணப்பதாரியின் கடன் பெறுமதிக்கு இணங்கியதாக காணப்படும்.<br>• குத்தகை காலப்பகுதி: 12-60 மாதங்கள்<br>• மீள்கொடுப்பனவு: சமப்படுத்தப்பட்ட தவணைகள், கட்டமைக்கப்பட்ட அல்லது முன்னதாக ஒப்புக்கொள்ளப்பட்ட அட்டவணைப் பிரகாரம் கட்டமைக்கப்பட்ட அல்லது மொத்தமாக செலுத்தும் முறை |
| கடன்கள் | கடன் உற்பத்திகள் கடன் பெறுநரின் தனிப்பட்ட மற்றும் வியாபார நோக்கங்களுக்கு நிதியளிக்க வழங்கப்படுகின்றன. | • கடன் காலம்: 3 தொடக்கம் 60 மாதங்கள்<br>• உறுகின்ற வட்டி: ஒப்புக்கொள்ளப்பட்ட நிலையான |

| | | |
|---|---|---|
| | தனிப்பட்ட கடன்கள் வீடொன்றைக் கட்டுதல், அடுக்குமாடிக் குடியிருப்பொன்றை வாங்குதல், அல்லது கருவிகளை கொள்வனவு செய்தல் போன்ற நிகழ்தகு செலவுகளுக்கு நிதியளிக்க வடிவமைக்கப்பட்டுள்ளன.<br>வியாபார கடன்கள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் பெருநிறுவனங்களது மூலதன மற்றும் தொழிற்படு மூலதனத் தேவைகளுக்கு நிதியளிக்க வடிவமைக்கப்பட்டுள்ளன. | வீதத்தில் வெளிநிற்கும் நிலுவைமீது வட்டி விதிக்கப்படும்.<br>● மீள்கொடுப்பனவு: சமப்படுத்தப்பட்ட தவணைகள், கட்டமைக்கப்பட்ட அல்லது முன்னதாக ஒப்புக்கொள்ளப்பட்ட அட்டவணைப் பிரகாரம் கட்டமைக்கப்பட்ட அல்லது மொத்தமாக செலுத்தும் முறை<br>● பிணையமானது உத்தரவாதப்படுத்துநர்கள், நிலையான வைப்புகள், சொத்து ஈடு, வாகனம் அல்லது கம்பெனியினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வேறேதேனும் பிணையம் மீதான சோந்தை வடிவில் கோரப்படலாம்.<br>● குறைவடையும் தவணை உத்தரவாத காப்புறுதி உள்ளடக்கமொன்றை பெற்றுக்கொள்ள சேவைநாடுநர் தேவைப்படுத்தப்படுகின்றார்.<br>● வாடகைக் கொடுப்பனவுகளுக்கு திகதி பிற்குறிப்பிடப்பட்ட காசோலைகள் பெற்றுக்கொள்ளப்படும். |
| தங்கக் கடன் | தங்க நிதிகளின்கீழ், தங்கம் மற்றும் தங்க நகைகளுக்கு எதிராக அதிகூடியதாக 12 மாதங்களுக்கு காசு முற்பணங்கள் வழங்கப்படும். கடன் தொகை மற்றும் வருமதியாகும் வட்டி முழுமையாக செலுத்தி முடிக்கப்படும் வரையில் தங்க நகைகள் கம்பெனியின் பாதுகாப்பின்கீழ் காணப்படும். | ● தங்க நகைகளுக்கான முற்பணங்கள் கோரப்படும் நகைகளது கரட் மீது தங்கியுள்ளன.<br>● முற்பணத் தொகையானது நகைகளின் கரட் மற்றும் நிறைக்கிணங்க வேறுபடும்.<br>● 14-24 கரட்களுக்கு இடைப்பட்ட தங்க நகைகள் ஏற்றுக்கொள்ளப்படும். |
| நிலையான வைப்புகள் | நிலையான வைப்பு கணக்கொன்று வைப்பாளரை உயர் வட்டி வீதத்தினை பெற இயலுமாக்குகின்றது. வட்டி மாதாந்தம், காலண்டுக்கொருமுறை, வருடத்திற்கொருமுறை, வருடாந்தம் அல்லது முதிர்வின்போது செலுத்தப்படலாம். | ● வைப்பு காலப்பகுதி: 1-60 மாதங்கள்<br>● வைப்பாளர்கள் 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட இலங்கையின் பிரஜை/இரட்டைப் பிரஜையாக காணப்படுதல் வேண்டும்.<br>● குறைந்தபட்ச வைப்புத்தொகை ரூ.5,000.00 ஆகும்.<br>● தனிநபர்கள், பெருநிறுவனங்கள் மற்றும் இலங்கையில் பதியப்பெற்றுள்ள ஏனைய |

| | | |
|---|---|---|
| | | நிறுவகங்களிடமிருந்து வைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படும்.<br><br>● சிரேஷ்ட பிரஜைகள் வைப்புகளை ஆரம்பிக்க 60 வயது அல்லது அதற்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகள் தகுதியுடையவர்களாவர்கள்.<br><br>● வைப்பு உடைமையாளர்கள் வட்டிக் கொடுப்பனவினை மாதாந்தமோ, காலாண்டிலோ, வருடத்திற்கு இருமுறையோ, வருடாந்தமோ அல்லது முதிர்வின்போதோ பெற்றுக்கொள்ளுமாறு தெரிவுசெய்யலாம்.<br><br>● வட்டியை முதிர்வினில் செலுத்துகின்றபோது வட்டி வீதம் வருடாந்த அடிப்படையில் குறிப்பிடப்படுவதுடன் வட்டி எளிய வீதங்களில் உறப்பட்டு நிலையான வைப்பின் முடிவில் மாத்திரமே கணக்கிடப்பட்டு செலுத்தப்படும்.<br><br>● மாதாந்த வட்டி கொடுப்பனவுகளில், வட்டியானது வருடத்திற்காக ஒப்புக்கொள்ளப்பட்ட வட்டி வீதத்தினைப் பிரயோகித்து அதனை 12 மாதங்களுக்கு பிரித்து கணக்கிடப்படும். வட்டி வீதங்கள் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நிலையான வைப்பு முகட்டு வீதங்களுக்கு உட்பட்டவையாகும்.<br><br>● நிலையான வைப்பு வட்டியினை கணிப்பிட்டு பயனாளரது கணக்கிற்கு மாற்றுகின்ற நேரத்தில் தற்போதிருக்கின்ற வரிகள்/தீர்வைகள் குறித்த வழிகாட்டியுரைப்புகள் கருத்திற்கொள்ளப்படும் (உ-ம்: வட்டி வருமானத்தின் பிடித்துவைத்தல் வரி)<br><br>● வட்டியைப் பெறுவதற்காக நிலையான வைப்புக்கணக்கொன்று குறைந்தபட்சம் 30 நாட்கள் செயற்பாட்டிலிருத்தல் வேண்டும்.<br><br>● இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டியுரைப்புகள் பிரகாரம் முதிர்வுக்கு முன்னதாக நிலையான வைப்பு |

| | | |
|---|---|---|
| | | மீளப்பெறல்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வீதமொன்று பிரயோகிக்கப்படும்.<br><br>● இலங்கை மத்திய வங்கியின் நிதிசார் புலனாய்வு அலகினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பில் கம்பெனியினால் கோரப்படுகின்ற தகவல்களை வாடிக்கையாளர் வெளிப்படுத்தவில்லையெனில் ஏதேனும் வைப்பினை மறுப்பதற்கான உரிமையை ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சி கொண்டுள்ளது.<br><br>● தகுதிபெற்ற வைப்பு உடைமையாளர்கள் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் அமுல்படுத்தப்பட்ட இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டத்தின்கீழ், வைப்பாளர் ஒருவருக்கான அதிகூடிய காப்பீட்டுத் தொகையான ரூ.1,100,000 உடன் காப்புறுதிப்படுத்தப்படுவார்.<br><br>● நிலையான வைப்பு இடம்பெறலின்போது வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் முதிர்வடைந்த வைப்புகள் முடிவுறுத்தப்படுவதுடன் நிதிகள் நிலையான வைப்பு கணக்கு பயனாளருக்கு மாத்திரம் மாற்றப்படும். |
| சேமிப்புகள் | ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சி சிறப்பான வருமானத்தினையும் தேவைப்படும்போது நிதிகளை வேண்டுமாறு மீளப்பெறுவதனையும் உறுதிப்படுத்தி வழமையான சேமிப்புக் கணக்குகள், மகளிர் சேமிப்புக் கணக்குகள் மற்றும் சிறுவர் சேமிப்புக் கணக்குகள் உள்ளிட்ட பல்வேறு சேமிப்புக் கணக்குகளை வழங்குகின்றது.<br><br>சேமிப்புக் கணக்குகளில் காணப்படும் வைப்புகளின் மீதான செல்லுபடியாகும் வட்டி வீதமானது கணக்கு மிகுதி மற்றும் கணக்கின் வகை என்பவற்றைப் பொறுத்து மாறுபடும். | ● வைப்பாளர்கள் 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட இலங்கையின் பிரஜை/இரட்டைப் பிரஜையாக காணப்படுதல் வேண்டும்.<br><br>● தனிநபர்கள், பெருநிறுவனங்கள் மற்றும் இலங்கையில் பதியப்பெற்றுள்ள ஏனைய நிறுவகங்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.<br><br>● பெற்றோர் அல்லது சட்டப்பூர்வ பாதுகாவலர்களை முதன்மை கணக்கு உடைமையாளர்களாகக் கொண்டு 18 வயதிற்கு குறைந்த சிறுவர்களுக்காக சிறுவர் சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பிக்கலாம்.<br><br>● வட்டி கணிப்பு: அனைத்து சேமிப்புக் கணக்குகளுக்கும் வட்டி நாளாந்தம் கணிக்கப்படுவதுடன் வருடாந்தம் |

| | | |
|---|---|---|
| | | குறிப்பிடப்பபட்டவாறு எளிய வட்டி அடிப்படையில் வட்டி கணக்கிடப்பட்டு கணக்கிற்கு மாதாந்தம் வைப்பிடப்படும். |
| இஜாரா குத்தகை | இஜாரா குத்தகை வசதிகள் பிரதானமாக தனிப்பட்ட மற்றும் வர்த்தக பாவனைக்காக பதிவுசெய்யப்பட்ட மற்றும் பதிவுசெய்யப்படாத வாகனங்களது பிரசித்திபெற்ற மாதிரிகளுக்காக வழங்கப்படுகின்றது.<br><br>இஜாரா குத்தகைகள் புத்தம்புதிய இயந்திரங்களையும் கருத்திற்கொள்ளும். இஜாரா குத்தகை வசதிக்கு தகுதிப்பெறுவதற்காக விண்ணப்பதாரர் குத்தகை அர்ப்பணிப்புகளை எதிர்கொள்வதற்கான அவரது இயலுமையை தெளிவாக வெளிப்படுத்த வேண்டும். | • மீள்செலுத்தும் தகுதியுடன் ஒரு சொத்தினை வாங்க விரும்பும் 18 வயதிற்கு மேற்பட்ட எந்தவொரு நபரும் அல்லது நிறுவனமும் குத்தகைக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவராவார்.<br><br>• பெறுமதிக்கான கடன் வீதமானது இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகள் மற்றும் விண்ணப்பதாரியின் கடன் பெறுமதிக்கு இணங்கியதாக காணப்படும்.<br><br>• குத்தகை காலப்பகுதி: 12-60 மாதங்கள்<br><br>• மீள்கொடுப்பனவு: சமப்படுத்தப்பட்ட தவணைகள், கட்டமைக்கப்பட்ட அல்லது முன்னதாக ஒப்புக்கொள்ளப்பட்ட அட்டவணைப் பிரகாரம் கட்டமைக்கப்பட்ட அல்லது மொத்தமாக செலுத்தும் முறை |
| வகாலா தவணை முதலீடு | வகாலா தவணை முதலீடானது எதிர்பார்க்கப்பட்ட இலாபமொன்றினை மாதாந்தமோ அல்லது வருடாந்தமோ பெற்றுக்கொள்ள முதலீட்டாளரை இயலுமாக்குகின்றது. இலாபமானது வாடிக்கையாளரின் விருப்பின்பிரகாரம் மாதாந்தமோ அல்லது முதிர்வின்போதோ செலுத்தப்படும். | • வைப்புக் காலப்பகுதி: 1-60 மாதங்கள்<br><br>• வைப்பாளர்கள் 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட இலங்கையின் பிரஜை/இரட்டைப் பிரஜையாக காணப்படுதல் வேண்டும்.<br><br>• குறைந்தபட்ச வைப்புத்தொகை ரூ.5,000.00 ஆகும்.<br><br>• பெருநிறுவனங்கள் மற்றும் இலங்கையில் பதியப்பெற்றுள்ள ஏனைய நிறுவகங்களிடமிருந்து வைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படும்.<br><br>• சிரேஷ்ட பிரஜைகள் வைப்புகளை ஆரம்பிக்க 60 வயது அல்லது அதற்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகள் தகுதியுடையவர்களாவர்கள்.<br><br>• வைப்பு உடைமையாளர்கள் இலாபக் கொடுப்பனவினை மாதாந்தமோ, காலாண்டிலோ, வருடத்திற்கு இருமுறையோ, வருடாந்தமோ அல்லது |

| | | |
|---|---|---|
| | | முதிர்வின்போதோ பெற்றுக்கொள்ளத் தெரிவுசெய்யலாம்.<br><br>• இலாபத்தினை முதிர்வினில் செலுத்துகின்றபோது இலாபம் வருடாந்த அடிப்படையில் குறிப்பிடப்படுவதுடன் இலாப வீதங்கள் எளிய வீதங்களில் உறப்பட்டு தவணை முதலீட்டின் இறுதித் தவணையின் முடிவில் மாத்திரமே கணக்கிடப்பட்டு செலுத்தப்படும். மாதாந்த இலாப கொடுப்பனவுகளில், இலாபமானது வருடத்திற்காக ஒப்புக்கொள்ளப்பட்ட இலாப வீதத்தினைப் பிரயோகித்து அதனை 12 மாதங்களுக்கு பிரித்து கணக்கிடப்படும். இலாப வீதங்கள் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட வகாலா தவணை முதலீட்டு முகட்டு வீதங்களுக்கு உட்பட்டவையாகும்.<br><br>• வகாலா இலாபத்தினை கணிப்பிட்டு பயனாளரது கணக்கிற்கு மாற்றுகின்ற நேரத்தில் தற்போதிருக்கின்ற வரிகள்/தீர்வைகள் குறித்த வழிகாட்டியுரைப்புகள் கருத்திற்கொள்ளப்படும் (உம்: வட்டி வருமானத்தின் பிடித்துவைத்தல் வரி)<br><br>• இலாபத்தைப் பெறுவதற்காக வகாலா முதலீடொன்று குறைந்தபட்சம் 30 நாட்கள் செயற்பாட்டிலிருத்தல் வேண்டும்.<br><br>• இலங்கை மத்திய வங்கியின் நிதிசார் புலனாய்வு அலகினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பில் கம்பெனியினால் கோரப்படுகின்ற தகவல்களை வாடிக்கையாளர் வெளிப்படுத்தவில்லையெனில் ஏதேனும் வைப்பினை மறுப்பதற்கான உரிமையை ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சி கொண்டுள்ளது.<br><br>• இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டியுரைப்புகள் பிரகாரம் முதிர்வுக்கு முன்னதான மீளப்பெறல்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வீதமொன்று பிரயோகிக்கப்படும்.<br><br>• தகுதிபெற்ற வைப்பு |

| | | |
|---|---|---|
| | | உடைமையாளர்கள் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் அமுல்படுத்தப்பட்ட இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டத்தின்கீழ், வைப்பாளர் ஒருவருக்கான அதிகூடிய காப்பீட்டுத் தொகையான ரூ.1,100,000 உடன் காப்புறுதிப்படுத்தப்படுவார்.<br><br>● முதலீடு இடம்பெறலின்போது வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் முதிர்வடைந்த முதலீடுகள் முடிவுறுத்தப்படுவதுடன் வகாலா தவணை முதலீடு நிறைவு நிதிகள் வகாலா முதலீட்டு கணக்கு பயனாளருக்கு மாத்திரம் மாற்றப்படும். |
| கலப்பு குத்தகை + கடன் வசதி | ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சி சொத்து கையகப்படுத்தலிற்கான நெகிழ்திறமிக்க நிதி தெரிவினை வாடிக்கையாளர்களுக்கு வழங்க குத்தகை வசதியுடன் இணைந்த கடன் வசதியொன்றின் சேர்மானமாக கலப்பு குத்தகை + கடன் வசதியினை வழங்குகின்றது. | ● தகுதிநிலை: கம்பெனியின் கடன் மதிப்பீட்டுக்குட்பட்டு வசதியை மீளச்செலுத்தும் இயலுமையுடைய தனிநபர்கள் அல்லது வியாபார ஸ்தாபனங்கள் விண்ணப்பிக்கலாம்.<br><br>● உற்பத்தி கட்டமைப்பு: இவ்வசதி பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது.<br>I. சொத்துக்கு நிதிவழங்க குத்தகை/இஜாரா கூறு<br>II. குத்தகைக்குவிடப்பட்ட சொத்துடன் தொடர்புடைய கடன்/வகாலா நிதி கூறு<br>● வெளிப்படுத்துகை: கம்பெனியின் கடன் கொள்கை மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டியுரைப்புகளுக்கு இணங்க தீர்மானிக்கப்படும்.<br><br>● காலப்பகுதி: அனுமதிக்கப்பட்ட கடன் கொள்கை மற்றும் உற்பத்தி வழிகாட்டியுரைப்புகளுக்கு இணங்க<br><br>● மீள்கொடுப்பனவு: அனுமதிக்கப்பட்ட வசதி கட்டமைப்பின் அடிப்படையில் முன்னொப்புக்கொள்ளப்பட்ட மீள்கொடுப்பனவு அட்டவணைக்கு இணங்க மீள்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.<br><br>● பிணையம்/அடமானம்:<br>I. ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சிக்கு குத்தகைக்கு விடப்பட்ட சொத்தின் முற்றான உரித்து |

| | | |
|---|---|---|
| | | II. குத்தகைக்குவிடப்பட்ட சொத்தின்மீதான சோந்தை<br>III. தனிப்பட்ட உத்தரவாதப்படுத்துநர்கள்<br>IV. கம்பெனியினால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க கோரிக்கை வாக்குறுதிப் பத்திரங்கள் (DPN) அல்லது ஏனைய பிணையங்கள்.<br><br>● விதிப்பனவுகள்: செல்லுபடியாகும் ஆவணப்படுத்தல் கட்டணங்கள், முத்திரை வரிகள் மற்றும் ஏனைய விதிப்பனவுகள் கம்பெனியின் தற்போதைய தீர்வை கட்டமைப்பிற்கு இணங்க பிரயோகிக்கப்படும். |
| இருசக்கர வாகனத்திற்கான நிதி | இலங்கை முழுதுமான தனிப்பட்ட பயணம், தொழில், மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக **உந்துருளிகள் மற்றும் ஸ்கூட்டர்கள்** கொள்வனவிற்கான நிதி வசதிகளை ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சி வழங்குகின்றது. | ● தகுதிநிலை:<br><br>I. நிரந்தர தொழிலில் சம்பளம்பெறும் ஊழியர்கள்<br>II. குறைந்தபட்சம் ஆறு மாத தொடர்ச்சியான வியாபார அனுபவத்துடனான சுயதொழில் தனிநபர்கள் மற்றும் சிறிய தொழில் உடைமையாளர்கள்.<br><br>விண்ணப்பதாரர்கள் வசதியை மீளச்செலுத்தும் திறனை வெளிப்படுத்தவேண்டும் என்பதுடன் வருமானம் அல்லது வியாபார தொடர்ச்சிக்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றினையும் வழங்கவேண்டும்.<br><br>● புவியியல் பரப்பு: ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சி இன் கிளை வலையமைப்பு ஊடாக இலங்கையின் அனைத்து பிராந்தியங்கள் ஊடாக வசதிகள் கிடைக்கப்பெறுகின்றன.<br><br>● தகுதியான வாகன மாதிரி<br><br>I. TVS Ntorq<br>II. Suzuki Burgman<br>III. Bajaj NS 200<br>IV. Bajaj Discover 125<br>V. Bajaj CT100<br>VI. Yamaha FZ Version 4<br>VII. Yamaha FZ Version 2<br>VIII. Yamaha R15 Version 4<br>IX. Yamaha MT15 Version 4<br>X. Yamaha Ray ZR 113 Disc<br>XI. Yamaha Ray ZR 113 Street Rally<br>XII. Yamaha Ray ZR 125 Disc<br>XIII. Yamaha Ray ZR 125 Street Rally |

XIV. Honda Dio
XV. Grazia DX

கம்பெனியின் அனுமதிக்கப்பட்ட சொத்து சட்டகத்திற்கு உட்பட்டு, வாகனங்கள் பொதுவில் 2015 ஆம் ஆண்டு அல்லது அதற்குப் பின்னர் தயாரிக்கப்பட்டதாக காணப்படவேண்டும்.

- வெளிப்படுத்துகை:

புத்தம்புதிய வாகனங்கள்: விநியோகத்தர் விலைச்சிட்டை பெறுமதியில் 70% வரையில்

மீள்சுழற்சியாக்கப்பட்ட வாகனங்கள்: விநியோகத்தர் விலைச்சிட்டை பெறுமதியில் 70% வரையில்

பதிவுசெய்யப்பட்ட வாகனங்கள்: வெளிப்படுத்துகையானது அனுமதிக்கப்பட்ட உள்ளக பெறுமதி சட்டகத்திற்கு இணங்க தீர்மானிக்கப்படும்.

அனைத்து வசதிகளும் இலங்கை மத்திய வங்கி வழிகாட்டியுரைப்புகள் மற்றும் கடன் கொள்கை தேவைப்பாடுகளுக்கு உட்பட்டு வழங்கப்படும்.

- வசதி காலப்பகுதி:

அதிகூடிய காலப்பகுதி: 36 மாதங்கள் வரையில்

- உத்தரவாதப்படுத்துநர் தேவைப்பாடுகள்

| **வாடிக்கையாளர் வகை** | **உத்தரவாதப்படுத்துநர் தேவைப்பாடு** |
|---|---|
| சம்பளம்பெறும் ஊழியர்கள் | ஒரு சொந்த குடும்ப உத்தரவாதப்படுத்துநர் மற்றும் ஒரு வெளியிலுள்ள உத்தரவாதப்படுத்துநர் |
| சுயதொழில்/ வியாபார உரிமையாளர் | ஏற்றுக்கொள்ளக்கூடிய வருமான சான்றுகளுடனான இரு உத்தரவாதப்படுத்துநர்கள் |
| குறைந்த வெளிப்படுத்துகை வசதிகள் | கடன் அனுமதிக்கு உட்பட்டு ஒரு உத்தரவாதப்படுத்துநர் கருத்திற்கொள்ளப்படலாம். |

- அடமானம்/பிணையம்:

  - நிதியளிக்கப்பட்ட வாகனத்தின் அடகு உரித்து கையளிப்பு
  - கம்பெனியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட

| | | |
|---|---|---|
| | | தனிப்பட்ட உத்தரவாதப்படுத்துநர்கள்<br>➢ கடன் மதிப்பீடுகளின் அடிப்படையில் மேலதிக பிணையங்கள் தேவைப்படுத்தப்படலாம்.<br><br>● மீள்கொடுப்பனவு மாதிரி:<br><br>➢ சம்பளம் அல்லது வியாபார கணக்கிலிருந்து நிலையியற் கட்டளை<br>➢ ஏற்றுக்கொள்ளப்பட்ட மீள்கொடுப்பனவு அட்டவணையின் பிரகாரம் பின்திகதியிடப்பட்ட காசோலைகள்,<br><br>● வாகன பரிசோதனை: அனுமதிக்கு முன்னதாக சொத்தின் நிலை மற்றும் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்காக ஜனசகத்தி பினான்ஸ் பிஎல்சியின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினால் வாகனம் பரிசோதிக்கப்படலாம்.<br><br>● ஆரம்ப கூற்று: வசதியின் ஆரம்பக் கூற்று கம்பெனியின் தற்போதிருக்கும் கொள்கைகள் மற்றும் செல்லுபடியாகும் விதிப்பனவுகளுக்கு இணங்க அனுமதிக்கப்படலாம்.<br><br>● விதிப்பனவுகள்:<br><br>கம்பெனியின் தற்போதைய தீர்வை கட்டமைப்புக்கு இணங்க செல்லுபடியாகும் ஆவணப்படுத்தல் கட்டணங்கள், காப்புறுதி கட்டணங்கள், போக்குவரத்து மோட்டார் வாகன விதிப்பனவுகள் மற்றும் ஏனைய செல்லுபடியாகும் விதிப்பனவுகள் பிரயோகிக்கப்படும். |
| சூரியஒளிச் சக்திக்கான குத்தகை | சூரிய ஒளிச்சக்தி குத்தகை வசதிகள் குடியிருப்பு மற்றும் வர்த்தக பயன்பாட்டிற்காக சூரிய ஒளிச்சக்தி முறைமைகளை நிறுவுவதற்காக வழங்கப்படுகின்றன. விண்ணப்பதாரர் குத்தகை கடப்பாடுகளை பூர்த்திசெய்வதற்கான இயலுமையை வெளிப்படுத்திக்காட்டவேண்டும் என்பதுடன் இலங்கை மின்சார சபைக்கும் வாடிக்கையாளருக்கும் | ● மீள்செலுத்தும் திறனுடனான 18 வயதிற்கு மேற்பட்ட ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சியின் ஏதேனும் தற்போதிருக்கும் குத்தகை அல்லது நிலையான வைப்பு வாடிக்கையாளர்கள் மற்றும் JXG குழும ஊழியர்கள் சூரிய ஒளிச்சக்தி குத்தகைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.<br><br>● புதிய வாடிக்கையாளர்கள் |

| | | |
|---|---|---|
| | இடையிலான தொடர்புடைய ஒப்பந்தத்துடனும் இணங்கியொழுக வேண்டும்.<br><br><u>சூரிய ஒளித்தகடு வழங்குநர்கள்</u><br>1. Singer Solar Technologies<br>2. Singhagiri Solar<br>3. Fuji Solar Technologies<br>4. Fentons Solar<br>5. Hayleys Solar<br>6. Access Solar<br>7. Abans Solar<br>8. Baur's Solar<br>9. Three Sinha Solar | I. உள்ளடங்கும் தொழில்கள்: வைத்தியர்கள், பொறியியலாளர்கள், விரிவுரையாளர்கள், கணக்காளர்கள், சட்டத்தரணிகள் மற்றும் சிரேஷ்ட பெருநிறுவன தொழிலாளர்கள்.<br>II. ஏனைய தொழிற்றுறை தனிநபர்களிடமிருந்தான விண்ணப்பங்கள் கம்பெனியின் கடன் கொள்கைக்கு இணங்க, போதுமான வருமான மட்டங்கள் மற்றும் திருப்திகரமான CRIB வரலாறு என்பவற்றுக்கு உட்பட்டு கருத்திற்கொள்ளப்படும்.<br><br>● வெளிப்படுத்துகை:<br><br>தற்போதைய வாடிக்கையாளர்கள்: இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டியுரைப்புகள் மற்றும் விண்ணப்பதாரியின் கடன் நம்பகத்தன்மைக்கு உட்பட்டு, அதிகூடிய வெளிப்படுத்துகையானது மொத்த முறைமை செலவுகளின் (சூரிய ஒளித்தகவு + இன்வெர்டர்) 70% வரையில் காணப்படும்.<br><br>புதிய வாடிக்கையாளர்கள்: வாடிக்கையாளரின் கடன் மதிப்பீடு மற்றும் ஏற்புடைமைக்கு உட்பட்டு, சூரிய ஒளிச்சக்தி முறைமைப் பெறுமதியின் 60% வரையில் வெளிப்படுத்துகை வழங்கப்படும்.<br><br>● குத்தகைக் காலம்: 12-60 மாதங்கள்<br><br>● மீள்கொடுப்பனவு: சமப்படுத்தப்பட்ட தவணைகள், கட்டமைக்கப்பட்ட அல்லது முன்னதாக ஒப்புக்கொள்ளப்பட்ட அட்டவணைப் பிரகாரம் கட்டமைக்கப்பட்ட அல்லது மொத்தமாக செலுத்தும் முறை<br><br>● அடமானம் /பிணையம்:<br>I. தற்போதிருக்கின்ற குத்தகைக்குவிடப்பட்ட சொத்தின் குறித்தொதுக்கல் (வாகனம்)<br>II. ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சியினால் பேணப்படுகின்ற நிலையான வைப்பின்மீதான சோந்தை<br><br>III. கம்பெனியினால் ஏற்க்கொள்ளப்படும் தனிப்பட்ட உத்தரவாதப்படுத்துநர்கள்<br>IV. கம்பெனியின் கடன்கொள்கையின்கீழ் |

| | | |
|---|---|---|
| | | ஏற்றுக்கொள்ளப்படத்தக்க வேறேதேனும் அடமானங்கள். |
| பணத்தினால் ஆதாரப்படுத்தப்பட்ட கடன் | பணத்தினால் ஆதாரப்படுத்தப்பட்ட கடன் வசதியானது நிலையான வைப்பு அல்லது வகாலா முதலீட்டு உடைமையாளர்களை அவர்களது வைப்புக்களை மீளப்பெறாமல் அவ்வைப்புகளின் 70%-90% வரையிலான கடன்வசதியைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கின்றது. | ● ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சி நிலையான வைப்பு/வகாலா தவணை முதலீட்டு உடைமைளார்கள் அனைவரும் “ பணத்தினால் ஆதாரப்படுத்தப்பட்ட கடன்” வசதிக்கு தகுதியுடையவர்களாவர்.<br><br>● கடன் வட்டியானது வைப்பின் மாதாந்த வட்டியிலிருந்து மீளப்பெறப்படும் என்பதுடன் முதிர்வடைந்த கணக்கு உடைமையாளர்கள் அவர்களது கடன் வட்டியை மாதாந்த அடிப்படையில் தொடர்புடைய வருமதித் திகதியில் செலுத்த வேண்டும்.<br><br>● வைப்பின் முதிர்வின் பின்னர் வாடிக்கையாளர் கடனைத் தொடரவிரும்பினால், கடன் தீர்க்கப்பட்டு தற்போதிருக்கும் வட்டி வீதத்தில் மீளத்திறக்கப்படும் என்பதுடன் ஏதேனும் வெளிநிற்கும் வட்டியும் தீர்க்கப்படுதல் வேண்டும். |
| OD பிளஸ் வசதி | ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சி OD பிளஸ் எனும், வாகனங்களை பிணையங்களாக பயன்படுத்தி வாடிக்கையாளர்களுக்கு குறுகிய கால நிதியினை வழங்க வடிவமைக்கப்பட்ட கலப்பு நிதிவழங்கல் வசதியினை அளிக்கின்றது. இவ்வசதியானது வாடிக்கையாளர்களை செயற்படு மூலதனத்தை அணுகவும் அதேசமயம் அவர்களது வாகனத்தின் பாவனையை தக்கவைத்துக்கொள்ளவும் இயலுமாக்கும், மிகைவரைவு வகை கடன் வசதியுடன் குறைந்த வெளிப்படுத்துகை குத்தகை உள்ளடக்கத்தினை இணைக்கின்றது. | ● விண்ணப்பதாரிகளின் தகுதிநிலை: விண்ணப்பதாரிகள் கடன் மதிப்பீட்டிற்கு உட்பட்டு பின்வரும் வாடிக்கையாளர் வகைப்பாடுகளிலிருந்து கருத்திற்கொள்ளப்படுவர்.<br><br>I. வாகன விற்பனையாளர்கள் மற்றும் வர்த்தகர்கள்<br>II. செயற்படு மூலதனம் தேவைப்படும் சிறிய மற்றும் நடுத்தர அளவு வியாபார உரிமையாளர்கள்.<br>III. பின்வரும் தொழிலாளர்கள்: வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், தகவல் தொழிநுட்ப ஊழியர்கள், கணக்காளர்கள்<br><br>விண்ணப்பதாரிகள் வசதியை மீளச்செலுத்தும் திறனை வெளிப்படுத்திக்காட்ட வேண்டும் என்பதுடன் கடன் மதிப்பீட்டிற்காக தொடர்புடைய ஆவணங்களையும் வழங்கவேண்டும்.<br><br>● வாகனத் தகுதிநிலை:<br>**குறியீடு** **சொத்து வகை** **காலம்** |

| | | |
|---|---|---|
| A | மோட்டார் கார்கள் மற்றும் SUVs | 15 வருடங்கள் அல்லது அதற்கு கீழ் |
| B | மோட்டார் கார்கள் மற்றும SUVs | 15 – 20 வருடங்கள் |
| C | மோட்டார் வான்கள் | 15 வருடங்கள் அல்லது அதற்கு கீழ் |

- பெறுமதிக்கான கடன் (LTV)

| சொத்து வகை | LTV | OD பிளஸ் கடன் பெறுமதிக்காக கடன் | ஒருங்கிணைக்கப்பட்ட பெறுமதிக்கான கடன் |
|---|---|---|---|
| வகைப்பாடு A மற்றும் C | 10% | 60% | 70% |
| வகைப்பாடு B | 15% | 45% | 60% |

- வசதி காலப்பகுதி: OD பிளஸ் வசதியானது முகாமைத்துவ கடன் குழுவின் அனுமதிக்குட்பட்டு, அதிகூடியதாக 12 தொடக்கம் 18 மாத காலப்பகுதிக்கு வழங்கப்படுகின்றது.

- மீள்கொடுப்பனவு கட்டமைப்பு:
  I. குத்தகை மற்றும் கடன் இரண்டிற்கும் மாதாந்த வட்டி கொடுப்பனவுகள் தேவைப்படுத்தப்படுகின்றன.
  II. வசதிக் காலப்பகுதியின் நிறைவில் குத்தகைக் கூறு இறுதி மூலதன மீள்கொடுப்பனவினை உள்ளடக்கும்.
  III. ஒரு வரம்பாக செயற்படும் கடன் வசதியில் தேவையான தொகையை அதிலிருந்து எடுத்துக்கொள்வதுடன் அனுமதிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அதனைத் தீர்க்கவேண்டும்.

- பிணையம்/அடமானம்:
  - குத்தகைக் கூறின் கீழான வாகனத்தின் முற்றான உரித்து
  - கடன் வசதிக்காக குத்தகைக்குவிடப்பட்ட சொத்தின்மீதான சோந்தை
  - கம்பெனியினால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க தனிப்பட்ட உத்தரவாதப்படுத்துநர்கள்
  - கம்பெனியின் கடன்

| | | |
|---|---|---|
| | | கொள்கையின் கீழ் தேவைப்படுத்தப்படும் வேறு மேலதிக பிணையங்கள்<br><br>● விதிப்பனவுகள்:<br>➢ கம்பெனியின் தற்போதைய குத்தகை தீர்வைகளுக்கு இணங்க செயன்முறைப்படுத்தல் மற்றும் ஆவணப்படுத்தல் கட்டணங்கள் பிரயோகிக்கப்படும்.<br>➢ ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு இணங்க குத்தகை மற்றும் கடன் இரண்டிற்கும் செல்லுபடியாகும் முத்திரை வரி பிரயோகிக்கப்படும்.<br>➢ RMV மற்றும் ஏனைய செயற்படுத்தல் விதிப்பனவுகள் பிரயோகிக்கப்படலாம். |

## *A. வட்டி வீதங்கள்*

குத்தகைக்கு விடப்பட்ட உற்பத்திகளது வட்டி வீதமானது வசதியின் வகை, காலப்பகுதி மற்றும் வழங்கப்பட்ட பிணையம் என்பவற்றில் தங்கியுள்ளது. சந்தை நிலைமைகளின் அடிப்படையில் வட்டி வீதங்கள் காலத்திற்கு காலம் திருத்தப்படும்.

வைப்பு உற்பத்திகளுக்கு செல்லுபடியாகும் வட்டி வீதங்கள் அனைத்து கிளைகளிலும் கம்பெனியின் வலைத்தளத்திலும் காட்சிப்படுத்தப்படும்.

குத்தகை : 18%

கடன் : 18.5%

**வாடகை கணிப்பீட்டு உதாரணம் :**

| | |
|---|---|
| கடன்/குத்தகைத் தொகை | 1,000,000 |
| முத்திரை வரி | 20,000 |
| காலம் | 48 |
| வாடகை | 29,375 |

## *B. ஏனைய விதிப்பனவுகள், கட்டணங்கள் மற்றும் தரகுப்பணங்கள்*

● ஆவணப்படுத்தல் கட்டணம், காப்புறுதி பிரீமியம் தொகை, தொடர்புடைய அரசாங்க வரிகள் (செல்லுபடியாகுமெனில்), மதிப்பீட்டு கட்டணம் (செல்லுபடியாகுமெனில்) என்பன கடன்பெறுநரினால் ஏற்கப்படவேண்டும் என்பதுடன் கடன் வசதி பேச்சுவார்த்தைகளின்போது கம்பெனியால் அவை குறிப்பாக்கப்பட்டு தொடர்புறுத்தவும்படும். செல்லுபடியாகும் அனைத்து கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகளும் தொடர்புடைய எதிரீட்டுக் கடிதத்தில் குறித்துரைக்கப்படும்.

● கம்பெனி வசதி காலப்பகுதிக்கு மேலாக வசதியை சேகரிப்பதன் பகுதியொன்றாக வழங்கப்பட்ட ஏதேனும் அதிகரிக்கும் நன்மைகள் அல்லது சில செலவுகளை தவணைமுறைகளில் தீர்க்கலாம். வாடிக்கையாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இறுதி வாடகை/தவணையானது அத்தகைய தவணையில் தீர்க்கப்படும் அதிகரிக்கும் நன்மைகள் அல்லது செலவுகளினை உள்ளடக்கியதாகக் காணப்படும்.

● வைப்பு உடைமையாளர் ஒருவர் கடன் வசதியை கோரும்போது அல்லது வைப்புக்கு எதிராக

உத்தரவாதமளிக்கும்போது, செல்லுபடியாகும் வட்டி வீதங்கள் மற்றும் விதிப்பனவுகள் அனுமதிக் காலத்தின்போது தொடர்புறுத்தப்படும்.

- ஒப்பந்தமானது இரண்டு மாதங்கள் அல்லது அதற்கு மேலாக நிலுவையில் காணப்படுமாயின் நிலுவைத் தொகையின் 1% மேலதிகமாக வாடிக்கையாளர்மீது விதிப்பனவாக்கப்படும்.

- ரூ.3,500/- பரிமாற்ற கட்டணத்திற்கு மேலதிகமாக பின்வரும் மீள்திருத்தப்பட்ட முடிவுறுத்துகை விதிப்பனவுகள் விதிக்கப்படும்.

- மீள்அட்டவணையிடல், பரிமாற்றங்கள், மற்றும் வளப்படுத்தல் தவிர அனைத்து முற்கூட்டிய முடிவுறுத்துகைகளிலும் மூலதன வெளிநிற்றலின் 0.75% விதிப்பனவு விதிக்கப்படும்.

- அனைத்து மீள்அட்டவணையிடல், வளப்படுத்தல் மற்றும் பரிமாற்றங்களுக்கும் மூலதன வெளிநிற்றலில் 1.5% விதிக்கப்படும்.

| உற்பத்தி வகை | கட்டணங்கள், விதிப்பனவுகள் மற்றும் தரகுப்பணங்கள் | | வீதம்/தொகை (ரூபா) |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | | |
| **குத்தகை** | ஆவணப் படுத்தல் கட்டணம் | முச்சக்கரவண்டிகள் – ரூபா. 130,000/- இற்கும்கீழ் | ரூபா 5,000/- |
| | | முச்சக்கரவண்டிகள் - ரூபா 130,001/- இற்கு மேல் | ரூபா 6,500/- |
| | | பட்டா லொறிகள் | குறைந்தபட்சம் ரூபா 7,500 அல்லது வசதித் தொகையின் 0.75% |
| | | ஏனைய குத்தகை வசதிகள் | ரூபா 1 மில்லியன் வரையில் - ரூபா 7,500/-<br>ரூபா 1 மில். - ரூபா 2.5 மில். வரையில் - ரூபா 12,500/-<br>ரூபா 2.5 மில்.-ரூபா 5 மில். வரையில் - ரூபா 17,500/-<br>ரூபா. 5 மில்.-ரூபா 10 மில். வரையில் - ரூபா 22,500/-<br>ரூபா 10 மில்.-ரூபா 25.மில் - ரூபா 30,000/-<br>ரூபா 25 மில். மேல். - ரூபா 40,000/- |
| **பேரண்ட குத்தகை** | விசாரணை விதிப்பனவுகள் (பேரண்டத்திற்கு மாத்திரம்) | | காணப்பெறவில்லை |
| **கடன் வசதி செயன்முறைப்படுத்தல் தொடர்பான கட்டணங்கள்** | RMV கையாளுகை கட்டணம்/ RMV மிகை விதிப்பனவு | | ரூபா. 2,000/- |
| | RMV முன்னுரிமைகள் | | காணப்பெறவில்லை |
| | நபரொருவருக்கான CRIB விதிப்பனவுகள் | | ரூபா.875/- |

<table>
<tr><td rowspan="8"></td><td colspan="2">நபரொருவருக்கான பெயர் திரையிடல்</td><td>ரூபா.250/-</td></tr>
<tr><td colspan="2">RMV தடையிலா பரிசோதனை</td><td>ரூபா. 500/-</td></tr>
<tr><td colspan="2">இரண்டாம் கருத்து கட்டணம்</td><td>ரூபா. 250/-</td></tr>
<tr><td colspan="2">RMV முன்னுரிமை</td><td>காணப்பெறவில்லை</td></tr>
<tr><td colspan="2">நபரொருவருக்கான CRIB விதிப்பனவுகள்</td><td>ரூபா.875/-</td></tr>
<tr><td colspan="2">நபரொருவருக்கான பெயர் திரையிடல்</td><td>ரூபா.250/-</td></tr>
<tr><td colspan="2">RMV தடையிலா பரிசோதனை</td><td>ரூபா 500/-</td></tr>
<tr><td colspan="2">இரண்டாம் கருத்து கட்டணம்</td><td>ரூபா 250/-</td></tr>
<tr><td rowspan="7">குத்தகை</td><td rowspan="4">ஆயுட் காப்புறுதி விதிப்பனவுகள்</td><td>முச்சக்கரவண்டிகள்</td><td>ரூபா 1300/-</td></tr>
<tr><td>மோட்டார் சைக்கிள்</td><td>ரூபா 540/-</td></tr>
<tr><td>சிறிய ட்ரக் /மோட்டார் லொறி/ மோட்டார் கோச் /JCB/மோட்டார் வான் / இரட்டை கேப்</td><td>ரூபா 2,700/-</td></tr>
<tr><td>மோட்டார் கார் / SUV</td><td>ரூபா 5,400/-</td></tr>
<tr><td rowspan="3">காப்புறுதி கையாளல் கட்டணம் (முதலாவது வருடத்திற்கு மாத்திரம்)</td><td>முச்சக்கரவண்டிகள்</td><td>ரூபா 2000/-</td></tr>
<tr><td>சிறிய ட்ரக் /மோட்டார் லொறி/ மோட்டார் கோச் /JCB/மோட்டார் வான் / இரட்டை கேப்</td><td>ரூபா 2,500/-</td></tr>
<tr><td>மோட்டார் கார்/ SUV</td><td>ரூபா 2,500/-</td></tr>
<tr><td rowspan="3">பொதுவானவை</td><td colspan="2">சொத்து மீளிடமாற்றல் கட்டணம்</td><td>பரிவர்த்தனையொன்றுக்கு ரூபா 7,500/-</td></tr>
<tr><td colspan="2">மீள்கட்டமைத்தல் /மீள்அட்டவணைப்படுத்தல்</td><td>ரூபா 25,000/- இற்கு உட்பட்டு வசதித் தொகுதியில் குறைந்தபட்சம் ரூபா. 5,000/- அல்லது 0.30%</td></tr>
<tr><td colspan="2">முற்கூட்டிய முடிவுறுத்துகை விதிப்பனவு</td><td>காணப்பெறவில்லை</td></tr>
<tr><td rowspan="2">கடன்கள்</td><td colspan="2">ஆவணப்படுத்தல் கட்டணம்</td><td>வசதித் தொகையின் 1%</td></tr>
<tr><td colspan="2">ஆதன பரிசோதனை</td><td>காணப்பெறவில்லை</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| **பணத்தினால் ஆதாரப்படுத்தப்பட்ட வசதிகள்** | ஆவணப்படுத்தல் கட்டணம் | | காணப்பெறவில்லை | |
| | உத்தரவாத விநியோகம் | | | |
| **மீட்புகள்** | அஞ்சல் விதிப்பனவு | | ரூபா. 500/- | |
| | அஞ்சல் விதிப்பனவு | | ரூபா. 250/- | |
| | மீட்பு பின்தொடரல் விதிப்பனவு | | ரூபா.20,000/- உட்பட்டு வசதி நிலுவை தொகையின் 1% | |
| | காசோலை மீளல் விதிப்பனவுகள் (காசோலை ஒன்றுக்கு) | | ரூபா.2,000/- | |
| | தவறுகை வட்டி | | நிலுவைத் தொகையிலிருந்து மாதாந்தம் 3% | |
| | தீர்ப்பனவு கட்டணம் | | 3500/- | |
| | மீள்உடைமை கட்டணம் | **வாகன வகை** | **50 கிமீ அல்லது அதற்கு கீழ்** | **50 கிமீ இற்கு மேல் ஒவ்வொரு மேலதிக கி.மீற்றருக்கான கட்டணம்** |
| | | முச்சக்கரவண்டி | 40,000/- | 150/- |
| | | கார், வான், மற்றும் இரட்டை நோக்கம் | 70,000/- | 200/- |
| | | லொறி, பாரவூர்தி, டிப்பர், மோட்டார் கோச் | 80,000/- | 250/- |
| | மீளுடைமை மீதான மிகைவிதிப்பனவு | | மீளுடைமை கட்டணத்தின் 5% | |
| | வாகன நிறுத்துமிட கட்டணம் (நாளொன்றுக்கு) | மோட்டார் சைக்கிள் | ரூபா.100/- | |
| | | முச்சக்கரவண்டி | ரூபா.100/- | |
| | | கார் | ரூபா.250/- | |
| | | கேப் / ஜீப் /வான் /பட்டா லொறி | ரூபா.250/- | |
| | | லொறி/டிப்பர் /பவுசர் /பஸ்/டிராக்டர் | ரூபா.250/- | |
| | | நீண்ட வாகனம் /JCB/கனரக வாகனம் /நகர்த்திகள் | ரூபா.300/- | |
| | விலைச்சிட்டை விதிப்பனவுகள் (விலைச்சிட்டையொன்றுக்கு) | | 1,000/- | |

| | | |
|---|---|---|
| **தங்கக் கடன்** | முத்திரை வரி | ரூபா 25,000 இனை விஞ்சும் கொடுக்கல்வாங்கல்களுக் கான விதிப்பனவு ரூபா.25/- |
| | நினைவூட்டல் விதிப்பனவு – 1வது நினைவூட்டல் | ரூபா. 55/- |
| | நினைவூட்டல் விதிப்பனவு – 2வது நினைவூட்டல் | ரூபா. 55/- |
| | நினைவூட்டல் விதிப்பனவு – இறுதி நினைவூட்டல் | ரூபா. 115/- |
| | ஏல விதிப்பனவு | 3% |
| **நிறுத்துமிடம்** | **நிறுத்துமிட மதிப்பாய்வு கட்டணங்கள்** | |
| | மோட்டார் சைக்கிள் | ரூபா.800/- |
| | முச்சக்கர வண்டி | ரூபா. 800/- |
| | கார் | ரூபா.1300/- |
| | கேப் /ஜீப் /பட்டா லொறி | ரூபா.1300/- |
| | இரட்டை நோக்கம் | ரூபா. 1500/- |
| | லொறி/டிப்பர் /பவுசர் /பஸ் /டிராக்டர் | ரூபா. 2000/- |
| | நீண்ட வாகனம் /JCB/கனரக வாகனம் /நகர்த்திகள் | ரூபா. 2500/- |
| **பொறுப்பு உற்பத்திகள்** | | |
| **நிலையான வைப்பு மற்றும் சேமிப்பு தொடர்புடைய கட்டணங்கள்** | பிடித்து வைத்திருக்கும் வரிகள் கடிதங்கள் மற்றும் வரி நோக்கத்திற்காக விநியோகிக்கப்பட்ட நிலுவை உறுதிப்படுத்தல் கடிதங்கள் போன்ற அனைத்து நிலையியல் ஆவணங்களது விநியோகம். | தீர்வை இல்லை |
| | பிரதி சான்றிதழ் /புத்தகங்கள் /பிரதி நீக்கல் சான்றிதழ் விநியோகம் | ரூபா.5000/- |
| | சேமிப்பு கணக்கு மூடல் கட்டணம் | ரூபா. 500/- |

### *C. ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சி இடமிருந்து உற்பத்திகள் மற்றும் சேவைகளை பெறும் நடைமுறை*

- ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சியிடமிருந்து உற்பத்திகள்/சேவைகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் அனைத்து சாத்தியமிக்க வாடிக்கையாளர்களும் அருகிலுள்ள கிளைக்கு செல்லலாம் அல்லது தொடர்புகொள்ளலாம். கிளைகள், அவற்றின் இடவமைப்புகள் மற்றும் தொடர்பு இலக்கங்களின் பட்டியல் எமது வலைத்தளத்தில் (http://www.janashakthifinance.lk/contact-us/) காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

- ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சியின் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியுடன் தங்களது தேவைப்பாடுகள் குறித்து கலந்துரையாடியதன் பின்னர் வாடிக்கையாளர் ஒரு விண்ணப்பப்படிவத்தினை பூரணப்படுத்துமாறு கோரப்படுவார். கோரப்பட்ட உற்பத்தி/சேவையுடன் தொடர்புடைய ஏதேனும் தொடர்புடைய ஆவணங்கள் கோரிக்கையை மதிப்பிடும் மற்றும் செயன்முறைப்படுத்தும் கிளைக்கு கையளிக்கப்படுதல் வேண்டும்.

- மதிப்பீட்டு செயன்முறையின் பாகமொன்றாக அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரினால் வியாபாரம் மற்றும் வதிவிட வளாகங்களின் பரிசோதனை முன்னெடுக்கப்படும்.

### *னு. D முற்கூட்டிய மீளப்பெறுகை அல்லது முடிவுறுத்துகைக்கான இழப்பீடு*

- வாடகைக்குவிடும் உற்பத்திகள்: காலாவதியாகாத காலப்பகுதியின் அடிப்படையில் எதிர்கால வாடகைகளிலான குறைப்பொன்று வசதிகளுக்காக வழங்கப்படும்

- வைப்புகள்: முதிர்வுக்கு முன்னதான மீளப்பெறல்கள் குறைக்கப்பட்ட வட்டி வீதத்தில் ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சிக்கான கிரமமான அறிவித்தலுடன் அனுமதிக்கப்படும். வைப்புக் காலப்பகுதியினைப் பொறுத்து வட்டி விதிக்கப்படும் என்பதுடன் அது மாதாந்த வட்டி கொடுப்பனவு வைப்பெனில், செலுத்தப்பட்ட மிகையான வட்டியானது கம்பெனிக்கு மீளச்செலுத்தப்படல் வேண்டும். வைப்பில் வைத்திருக்கப்படும் மூலதனத்திலிருந்து மிகையான கொடுப்பனவினை கழிப்பதற்கு ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சி உரித்துடையதாகும்.

### *E. கடன் வசதி மீட்பிற்கான நடைமுறை*

- ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சி வாடிக்கையாளரினால் கடன் வசதிகளது மீள்கொடுப்பனவினை வளப்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். காசு அடிப்படையிலான கம்பெனியின் ஒட்டுமொத்த கடன்வழங்கல் கொள்கையினுள் வாடிக்கையாளரின் காசுப் பாய்ச்சலுக்கு பொருந்தும் வசதிகளின் மீள்அட்டவணையிடல் மற்றும் மீள்கட்டமைத்தல் என்பவற்றை இம்முயற்சிகள் உள்ளடக்கும்.

- வாடிக்கையாளர்களினால் இன்னமும் தீர்ப்பனவாக்கமுடியாத சந்தர்ப்பத்தில், ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சி அதனது ஒப்பந்த உரிமைகள் மற்றும் நாட்டின் சட்டங்களுக்கு இணங்க மீளப்பெறல்களை ஆரம்பிக்க நிர்ப்பந்திக்கப்படலாம். ஒப்பந்தம் நெறிதவறியதாகியதன் விளைவாக எமது மீட்பு அதிகாரிகளை பணிக்கமர்த்த நாம் நிர்ப்பந்திக்கப்பட்டால், அத்தகைய வருகைகளின்போது உறப்பட்ட செலவுகள் ஒப்பந்தத்தில் விதிக்கப்படும். இது தொடர்பில் கம்பெனியால் உறப்பட்ட அனைத்து சட்ட மற்றும் ஏனைய செலவீனங்கள் வாடிக்கையாளரினால் பொறுப்பேற்கப்படுதல் வேண்டும்.

### *F. வாடிக்கையாளர் தகவலலை வெளிப்படுத்தல்*

- ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சி 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதிசார் வியாபார சட்டத்தின் 61(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்குட்பட்டு கம்பெனியுடனான வாடிக்கையாளர்களது அனைத்து கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் கடுமையான இரகசியத்தன்மையை அனுசரிக்கின்றது.

- எவ்வாறெனினும், ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சி இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குபடுத்தப்படுவதுடன், இலங்கை மத்திய வங்கி மற்றும் ஏனைய ஒழுங்குபடுத்தல்/நிலையியல் நிறுவகங்களுக்கு வாடிக்கையாளர்களுக்கான முற்கூட்டிய அறிவித்தலின்றியும், வாடிக்கையாளருக்கான மேலதிக கடப்பாடுகள் அல்லது சட்டத் தீர்வுகளின்றியும் வாடிக்கையாளர்களது கொடுக்கல்வாங்கல்கள் விபரங்களை வழங்க கடப்பாடுடையதுமாகும்.

### *G. 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிசர் கொடுக்கல்வாங்கல் முறைப்பாடு சட்டம்*

- CFC ஏதேனும் சட்டரீதியற்ற செயற்பாடு அல்லது ஏதேனும் குற்றமொன்றின் புரிகையுடன் ஏதேனும் கொடுக்கல்வாங்கல் அல்லது கொடுக்கல்வாங்கல் முயற்சி தொடர்புடையதாயிருக்கலாம் என

சந்தேகிக்க நியாயமான அடிப்படைகள் காணப்படின், 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல் முறைப்பாட்டுச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நிதிசார் விசாரணை அலகிற்கு அத்தகைய கொடுக்கல்வாங்கலை முறைப்பாடு செய்யும்.

### *H. செல்லுபடியாகும் சட்ட ஏற்பாடுகள்*

- உற்பத்திகள் 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதி குத்தகைச் சட்டம், 1949 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க ஈட்டுச் சட்டம், 1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க நுகர்வோர் கடன் சட்டம் மற்றும் இலங்கையில் செல்லுபடியாகும் வேறு சட்டங்களின் ஏற்பாடுகளின்கீழ் ஆளப்படுகின்றன.

### *I. முறைப்பாடு கையாளல் செயன்முறை*

- எமது வாடிக்கையாளர்களுக்கு சாத்தியமான சிறந்த சேவையை வழங்க எமது பணியாளர்கள் போதுமானளவில் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். எனினும், ஏதேனும் வழியில் எமது சேவைகள் குறித்து உங்களுக்கு கரிசனங்கள் காணப்படின், உமது கருத்துக்கள் மற்றும் பின்னூட்டங்களை நாம் வரவேற்கின்றோம். +94 117 577 577 மற்றும் +94 777 719 800 எனும் இலக்கங்களில் நீங்கள் எம்மை அழைக்கலாம் அல்லது info@janashakthi.lk வழியாக உங்களது பின்னூட்டங்களை அனுப்பலாம். உமது கரிசனைங்களை தீர்ப்பதற்கு சிறந்ததை நாம் செய்வோம்.

- எமது தீர்வுகள் உங்களது எதிர்பார்ப்புக்களை பூர்த்திசெய்யவில்லையெனில், தீர்வுக்கென காணப்படும் நிதிசார் ஒம்புட்ஸ்மேனுக்கு நேரடியாக முறைப்பாடு செய்யலாம். அவர் ஒம்புட்ஸ்மேன் திட்டத்தின்கீழ் உள்ளடங்கும் வாடிக்கையாளர்கள் மற்றும் நிதிசார் நிறுவனங்களுக்கு இடையிலான முறைப்பாடுகள் மற்றும் பிணக்குகளை விசாரித்து தீர்ப்பதற்கு தத்துவமுடையவராவார்.

**நிதிசார் ஒம்புட்ஸ்மேன்:**

நிதிசார் ஒம்புட்ஸ்டேன்,
143A, வஜிரா வீதி, கொழும்பு 05,
தொலைபேசி:- +94 11 259 5624
டெலிபெக்ஸ்:- +9411 259 5625
மின்னஞ்சல்: fosril@sltnet.lk